IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2019

Deposition of Witness : PW 1

Name : அஞ்சலட்சுமி (வயது – தெரியாது)

Father's Name /W/o : க/பெ பிச்சை மணி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சித்தேரி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 16.10.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என் கணவர் என் மீது ராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி எண்.40/2002 தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். அதில் எனக்கும் என் கணவருக்கும் நடந்த திருமணத்தை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவு ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டது என்றாலும் அதை அகற்ற கோரி நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மனு அனுமதிக்கப்பட்டு பிரதான மனு 40/2002 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி மனுவில் என் கணவர் இடைக்கால ஜீவனாம்சம் கொடுத்து வந்தார் என்றால் இல்லை. மீண்டும் 1 ஆம் பிரதிவாதி எச்.எம்.ஓ.பி எண்.37/2012 தாக்கல் செய்தார் எனறால் சரிதான். அவர் தாக்கல செய்த மனுவைதான் வா.சா.ஆ – 9 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எச்.எம்.ஓ.பியில் பதிலுரை தாக்கல் செய்து வழக்கு நடத்தினேன் என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கு அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் மாற்றம் செய்து

எச்.எம்.ஓ.பி எண்.30/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சாட்சியங்களை விசாரித்ததை நான் பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு தவறான தொடர்பு இருந்ததாகவும், சேர்ந்து வாழவில்லை என்றும், கணவரை கொடுமைபடுத்தியதால் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் பொய்யாக போட்டுள்ளார். மேற்படி மனுவில் என் கணவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது.

4. மேற்படி மனுவில் கொடுக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து நான் வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன் என்றால் செய்தேன். மேல்முறையீடு காலதாமத்தால் செய்தேன் என்றால் சரிதான். வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் எதன் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் எச்.எம்.ஓ.பி எண்.30/2014 வழங்கிய உத்தரவை தெரிந்தவுடன் தாக்கல் செய்தேன். மேற்படி மேல்முறையீடு மனுவையும் நான் வாபஸ் வாங்கினேன் என்றால் இல்லை. இன்றைய தேதிவரையில் பொய்யாக மனு தாக்கல் செய்தார் என்றாலும் நான் அவருடன் சேர்ந்த வாழ வேண்டும் என்று எங்கேயும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்தேன்.

5. எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் அரக்கோணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன். என் பெயரில் தவறு உள்ளதால் தான் இன்றைய தேதிவரை அவருடன் சேர்ந்து வாழ்வதற்காக மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்தான் 2 ஆம் திருமணம் செய்து கொண்டார். என் கணவர் எப்போது 2 ஆம் திருமணம் செய்து கொண்டார் என்றால் தேதி தெரியாது. என் 3 ஆவது மகள் கைகுழந்தையாக இருக்கும் போது திருமணம் செய்து கொண்டார். என் கணவர் முறைப்படி விவாகரத்து கொடுத்தபின் தான் 2 ஆவது திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பொய். மேற்படி 2 ஆவது திருமணத்தை எதிர்த்து புகார் அளித்தேனா என்றால் புகார் அளித்தேன்.

**(சாட்சியம் அளிக்கும்போது உணர்ச்சிவசப்பட்டு அழுததால் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது)**